# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.11/2024 26.06.2024

## 58-ஆவது உலகத் தொடர்பு நாள் - 14.07.2024
## ஆயரின் சுற்றுமடல்

**இறை இயேசுவில் அன்பிற்கினிய சகோதர, சகோதரர்களே!**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த ஆண்டின் உலக சமூகத் தொடர்பு நாளுக்கான செய்தியை "செயற்கை நுண்ணறிவும் இதயத்தின் ஞானமும்: முழுமையான மனிதத் தொடர்பாடலை நோக்கி" என்ற சிந்தனையில் வழங்கியுள்ளார்கள். அதில் காணப்படும் முதன்மைகளி லிருந்து, நம் மறைமாவட்டம் முன்னெடுக்க விழையும் சில விழுமியங்களை இச்சுற்றுமடல் வழியாகப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நாம் வாழும் சமூகம் அறிவியல் புரட்சியால் அதிவேகமான வளர்ச்சியைக் கண்டு அகமகிழ்கிறது. இந்தப் புரட்சிக்கு நாம் ஒவ்வொருவரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி செய்து வருகிறோம். இந்த அறிவியல் புரட்சி மனிதரை அடுத்த நிலைக்கு நகர்த்தி சென்றுள்ளது. தான் படைத்தது அனைத்தையும் நல்லதெனக் கண்ட கடவுள், படைப்பை தொடர்ந்து செயல்படுத்த மனிதருக்கு அதிகாரத்தைக் கொடுத்து, படைப்பின் பங்காளியாக அவர்களைப் படைத்தார். அம்மனிதரின் புதிய கண்டுபிடிப்பாகவும், சமூக நீரோட்டத்தைக் கேள்விக் கேட்கும் கண்டுபிடிப்பாகவும் அமைந்திருப்பதுதான் செயற்கை நுண்ணறிவு என்னும் அறிவியல் கண்டுபிடிப்பு. இது நுட்பமான இயந்திரங்களை உருவாக்கி மனிதர்களைப்போல இயந்திரங்களை செயல்பட வைக்கும் ஒரு நுணுக்கமான தொழில்நுட்பமாகும். செயற்கை நுண்ணறிவு பல நன்மைகளை இச்சமூகத்திற்குக் கொடுத்தாலும் ஏராளமான தீமைகளையும், காயங்களையும், வடுக்களையும் ஏற்படுத்துகின்றது.

நம் திருத்தந்தை பிரான்சிஸ் இந்த ஆண்டின் உலகத் தொடர்பு நாளுக்கான செய்தியில் இதையொட்டி தன் ஆழ்ந்த வருத்தங்களை வெளிப்படுத்தி இருக்கிறார். அதில் "இந்தச் செயற்கை நுண்ணறிவு, தகவல் மற்றும் தொடர்பாடல் உலகையும் நாம் வாழும் சமூகத்தின் சில அடித்தளங்களையும் முற்றிலும் பாதிக்கிறது. இம்மாற்றங்கள் இத்துறைகளில் தொழில்புரியும் வல்லுநர்களை மட்டுமல்லாமல், எல்லாரையும் பாதிக்கின்றன. தொழில்நுட்பத்தில் சிறந்தவர்களாகவும் மனிதத் தன்மையில் ஏழ்மையானவர்களாகவும் மானுடம் மாறிக்கொண்டிருக்கும் ஒரு பெரும் சவாலை இன்றைய நமது வரலாறு சந்திக்கத் தொடங்கியிருக்கிறது. இச்சூழலில் நமது சிந்தனைகள் மனித

இதயத்திலிருந்து தொடங்க வேண்டியது மிக அவசியம்'' எனக் குறிப்பிடுகிறார்.

மனித இதயம் அன்பால் நிறைந்திருக்க வேண்டிய நிலையிலிருந்து விலகி, செயற்கை நுண்ணறிவைப்போல இயந்திரத்தனமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு ஒருபோதும் மனிதருக்குரிய இடத்தை பெறமுடியாது. இது மனிதரைவிட அதிகச் செயல்திறனோடு செயல்பட்டாலும், அதிகச் செயல்பாடுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும், தகவல்களைச் சேகரிக்கவும், அவற்றைச் சேமித்து வைக்கவும், அவற்றைத் தொடர்புபடுத்தவும் மனிதரைவிட இயந்திரங்கள் அதிக எல்லையில்லாத ஆற்றல் கொண்டிருந்தாலும், மனிதர் மட்டுமே அவற்றை அர்த்தமுள்ளதாக்க முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இன்று சமூகத்தொடர்பு கருவிகளின் பெருக்கத்தால் மானுட சமூகம் அறநெறிமுறைகளையும், அறநெறிக் கோட்பாடுகளையும் இழந்து நிற்கிறது. மனிதநேயமற்ற செயல்கள் அதிகரித்து, அடுத்தவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் விதமாக எதிர்மறை கருத்துகளை மட்டுமே பதிவிடும் தளமாக மாறி வருகின்றன. இவ்வாறு மனிதர் தங்களைக் கல்மனம் கொண்ட மனிதராக மாற்றி வருகின்றனர்.

மனிதருக்கும், செயற்கை நுண்ணறிவுக்கும் அதன் தொழில் நுட்பத்திற்கும் இடையே ஏராளமான வேறுபாடுகள் உண்டு அவற்றிற்கு மனிதரைப்போல எண்ணங்கள் இல்லை. மனித அனுபவங்கள் இல்லை. உளவியல் ரீதியான எந்தப் பிரச்சனையும் இல்லை. அதேநேரத்தில் மனித நெறிமுறைகள், அறநெறிகளின் அடிப்படைக் கூறாய், எதிர்மறையான எந்தச் செயலுக்கும் செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் ஒருபோதும் வருந்துவது இல்லை. அவை யாரையும் நேசிப்பதில்லை, அடுத்தவரின் துன்பங்களையோ, வலிகளையோ, காயங்களையோ உணர்வதில்லை. சுருங்கச்சொன்னால், அவற்றுக்கென சொந்தக் கருத்து என்று எதுவும் இல்லை. ஏனெனில் அவற்றுக்குச் சொந்தமானது எதுவுமே இல்லை. அவை செயற்கையானவையே!

மானுடத்தின் ஒவ்வொரு தொழில்நுட்ப நீட்சியும் அன்புப்பணி செய்ய உதவும், அல்லது சமூக விரோத ஆதிக்கத்திற்கும் வழிவகுக்கும். இவ்வாறே செயற்கை நுண்ணறிவுத் திறனும் அறியாமையைப் போக்கும் சிறந்தக் கருவியாகவும், தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் கருவியாகவும் அமைகிறது. ஆயினும் அவை அறிவாற்றல் மாசுபாட்டின் ஊற்றாகவும், ஓர் உண்மையை பாதியாகவோ அல்லது முற்றிலும் திரித்தோ விவரிக்கவும் உதவும் எடுத்துக்காட்டாக குரல் செய்திகளில் ஒரு மனிதரின் குரலைப் பயன்படுத்தி அவர் சொல்லாத ஒன்றை அவர் சொன்னதாகச் செய்திப் பரப்பவும் உதவும்.

இன்று செயற்கை நுண்ணறிவு மிகப்பெரும் படைப்பாற்றல் கொண்டு எழுந்துள்ளது. இது ஓர் ஏற்றமிகு மாற்றமாகக் கருதப்படுகிறது

என்றாலும் ஆற்றல்மிகு கருவிகள் தவறாக கரங்களால் உபயோகிக்கப்பட்டால் குழப்பமிகுச் சூழ்நிலைகள் உருவாகும். அறநெறி வழிமுறைகளுக்கு உட்பட்டுச் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தினால் தீமையான பாகுபாடுகளை உருவாக்கும் சமூக அநீதிகளைத் தோற்றுவிக்கும் செயல்பாடுகளை தவிர்க்கலாம். போர்கள் பற்றிய தவறான செய்திகளால் இணைப்போர்கள் நடைபெற்றுள்ளன. அதேநேரத்தில் போர்க்களத்தில் துன்புற்றக் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் இவர்களைப் பற்றிய நேரடித் தகவல்கள்தான் போரின் ஆபத்தை உணரச் செய்கின்றன. செயற்கை நுண்ணறிவு போர் நிகழ்விடங்களுக்கு சென்று தகவல்களை சேகரித்து தொடர்பாடல்துறைக்கு உதவலாம்.

இச்சூழலில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் ஈடுபடுவோர், தொடர்பாடல் ஊடகங்களைப் பயன்படுத்துவோர் இவர்களின் மாண்பையும் திறமைகளையும் பாதுகாப்பதும், ஊடகங்களின் உள்ளடக்கங்களுக்கான பொறுப்பை ஏற்பதும், தகவல்கள் வேகமாகத் தேடுவதற்கு உதவியாக உண்மையான, சரியான தகவல்களை அட்டவணைப் படுத்துவதும், வெளிப்படைத் தன்மையோடு தகவல்களை கையாள்வதும், உண்மையான படம் அல்லது காணொலியை பதிவேற்றுவதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இந்நிலையில் நம் மறைமாவட்டத்திலுள்ள எல்லாப் பங்குத் தளங்களிலும் சமூகத்தொடர்பு கருவிகளை முறையாக கையாள்வது பற்றிய சிந்தனையையும், செயற்கை நுண்ணறிவின் தாக்கங்களையும், சவால்களையும் தொடர் பயிற்சியாகப் பல்வேறு வாழ்க்கை நிலையிலுள்ளவர் களுக்குக் கொடுத்து, நன்மை, தீமைகளை பகுத்தாய்ந்து கிறிஸ்துவின் மனநிலையில், கிறிஸ்துவின் இதயம் கொண்டு சமூகத்தை நேசிக்க, கிறிஸ்துவின் கண் கொண்டு சமூகத்தைப் பார்க்க சமூகத் தொடர்பு கருவிகளை தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டுகின்றேன்.

தமிழக அளவில், உலகத் தொடர்பு நாளானது ஜூலை 14–ஆம் நாள் ஞாயிறு அன்று கொண்டாடப்படுகிறது. அன்றைய காணிக்கை உலகமெங்கிலும் உள்ள தமிழர்களுக்கு இறை நம்பிக்கையை ஊட்ட தமிழக ஆயர் பேரவையால் உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் மாதா தொலைக்காட்சி மற்றும் மறைமாவட்ட சமூகத் தொடர்பு பணிக்காகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே அன்றைய ஞாயிறு காணிக்கையை மறைமாவட்டத்திற்கு அனுப்பி வைக்க அன்பாய் வேண்டுகின்றேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்
Sd/-
**+ ஆயர் நசரேன் சூசை**